தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை.6
ந.க.எண்.61795/ஏ1/இ1/2007 நாள் 9.8.2007

பொருள்: தகவலறியும் உரிமைச் சட்டம்–2205–தமிழ்நாடு தகவல் ஆணைய வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையின் மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கு அறிவுரை வழங்குதல்–சார்ந்து.

பார்வை: வழக்கு எண் 2444/விசாரணை/2007ல் 30.5.2007 அன்று தமிழ்நாடு தகவல் ஆணையத்தால் வழங்கப்பட்ட உத்தரவு.

தூத்துக்குடி மாவட்டம், பொதகலன்விளை, புனித மரியன்னை மேல்நிலைப் பள்ளியில் கைத்தொழிலாசிரியராகப் பணிபுரியும் திரு.எஸ்.ஆல்பர்ட் என்பாருக்கு அப்பள்ளி நிர்வாகத்தால் ஆறு வருடங்களுக்கு ஆண்டு ஊதிய உயர்வு அனுமதிக்கப்படாத நிலையில், அன்னார் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சில விபரங்களைக் கோரியபோது தூத்துக்குடி மாவட்டக் கல்வி அலுவலர் முழுமையற்றதும் தவறானதுமான தகவல்களை மனுதாரருக்கு அளித்துள்ளார். இது தமிழ்நாடு தகவல் ஆணையம் நடத்திய விசாரணையில் நிரூபணமாகியதுடன், தவறை சரி செய்து ஒரு வார காலத்தில் அறிக்கை சமர்ப்பிக்கவும் முழுமையானத் தகவல் தராமைக்காக அபராதம் ஏன் விதிக்கக் கூடாது என்பதற்கான விளக்கத்தை அளிக்கவும் தமிழ்நாடு தகவல் ஆணையம் தூத்துக்குடி மாவட்டக் கல்வி அலுவலருக்கு உத்தரவிட்டுள்ளது. அத்துடன் மாவட்ட அளவிலான கல்வித்துறை அலுவலர்களுக்கு, பள்ளி நிர்வாகங்கள் விதிகளுக்குப் புறம்பாகச் செயல்படும்போது அவற்றுக்கு முறையாக செயல்பட உத்தரவிடவும், தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்கள் கோரப்படும்போது மனுதாரருக்கு சரியான முறையில் விபரங்கள் வழங்க வேண்டுமெனவும் அறிவுறுத்த பள்ளிக் கல்வி இயக்குநருக்கு தமிழ்நாடு தகவல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இவ்விபரங்கள் பார்வையில் கண்ட தமிழ்நாடு தகவல் ஆணைய உத்தரவின் வாயிலாக பள்ளிக் கல்வி இயக்குநரின் கவனத்துக்கு வந்துள்ளது.

இனி வருங்காலத்தில் மேலே தெரிவிக்கப்பட்டவாறான நிகழ்வினை கண்டிப்பாகத் தவிர்க்கவும், தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரப்படும் தகவல்களை மனுதாரருக்குச் சரியான முறையில் வழங்கவும் தங்கள் வரம்பிற்குட்பட்ட பள்ளி நிர்வாகங்கள் விதிகளுக்கு புறம்பாகச் செயல்படும்போது முறையாகச் செயல்பட அவைகளுக்கு அறிவுறுத்தவும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் மாவட்டக் கல்வி அலுவலர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இவ்வறிவுரையினைத் தவறாது பின்பற்றவும், தமிழ்நாடு தகவல் ஆணையத்தால் சுட்டிக் காட்டப்பட்ட இவ்வாறான நிகழ்வினைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும், மாவட்டக் கல்வி அலுவலர்களும் மீளவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இச் செயல்முறைகளைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதலை உடன் சமர்ப்பிக்கவும் அனைத்து அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக் கல்வி இயக்குநர்.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.